

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது கண்டித்து தேனி வடக்கு மாவட்டம் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில் தேனியில் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து விருதுநகரில் முன்னாள் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் விருதுநகர் பழைய பஸ் ஸ்டாண்ட் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து 2000 க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்ற சாலைமறியலில் புலவர் சே.செவந்தியப்பன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் உட்பட நிர்வாகிகள் கைது செய்யப்பட்டார்கள்.



கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதை கண்டித்து மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. தலைமையில் திருமங்கலத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஏராளமான கழகத்தினரை போலீசார் கைது செய்தனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதி பேரணி!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் அறிக்கை!

கன்னியாகுமரி, ஆக. 5 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, இலக்கியவாதியாக, தலைசிறந்து விளங்கிய தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராகவும் இருந்த கழக தலைவர் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதி பேரணியானது எனது தலைமையில் 07.08.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், வடசேரி அறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து



அமைதி பேரணி தொடங்கி அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம், மணிமேடை சந்திப்பு, எஸ்.பி. அலுவலகம், கட்டபொம்மன் சந்திப்பு, அவ்வை சண்முகம் சாலை வழியாக சென்று ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.

ஆகவே இந்த அமைதி பேரணியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழகங்களில் அத்தனை முக்கியமான இடங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



திண்டுக்கல்லில் பேருந்து நிலையம் தி.மு.க. துணை பொதுச் செயலாளர் இ.பெரியசாமி தலைமையில், கிழக்கு மாவட்டச் செயலாளர் இ .பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. , முன்னாள் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், துணை செயலாளர் நாகராஜன், மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மறியல் செய்தனர்.



கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதை கண்டித்து மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் பி.மூர்த்தி தலைமையில் கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட ஒத்தக்கடையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசன் உள்ளிட்ட சுமார் ஐநூற்றுக்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர்.



எதிர்க்கட்சி தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது.நெல்லை மேற்கு மாவட்டம் அம்பையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மறியலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதை கண்டித்து மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் கோ.தளபதி தலைமையில் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம் உள்ளிட்டோர் முன்னிலையில் பழங்காநத்தம் அருகே மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக் கணக்கானோரை போலீசார் கைது செய்தனர்.





கழக இளைஞர் அணி செயலாளர், சட்டபேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சுரிமையை தடுக்கும் விதமாக த.வெ.க. அரசால் கைது செய்யப்பட்டதை கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இதுபோன்று மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, பேரூர் பகுதிகளிலும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்த சாலை மறியல் போராட்டத்தில் ஜெ.ஹெலன் டேவிட்சன், ஐ.கேட்சன், வழக்கறிஞர் ப.ஆனந்த், இ.ஜவகர், த.ஜீவா, மு.சேக்மீரான், என்.பி.துரை உட்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.